கர்த்தராகிய இயேசு கூனியைச் சுகமாக்கியது

(லூக்கா 13 : 10-17)

I <u>மனப்பாட வசனம் :</u> (2 Marks)

ஓசியா 6 : 6

"பலியை அல்ல. இரக்கத்தையும், தகனபலிகளைப் பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன் " .

II <u>பொருத்துக :</u> (1 Mark)

1. இயேசு	*- கட்டவிழ்க்கிறவர்*	*(லூக்கா 13 : 16)*
2. இயேசு	*- மகிமையான செய்கைகளைச் செய்கிறவர்*	*(லூக்13:17)*
3. பதினெட்டு வருஷமாய் கட்டபட்டிருந்தவள்	*- ஆபிரகாமின் குமாரத்தி*	*(லூக்கா 13 : 16)*
4. சாத்தான்	*- கட்டுகிறவன்*	*(லூக்கா 13 : 16)*

III <u>கோடிட்ட இட ங்களை நிரப்புக :</u> (1 Mark)

1. _____ *வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக்கொண்ட ஒரு ஸ்திரீ ஜெபஆலயத்தில் இருந்தாள்.*
2. *இயேசு ஓய்வுநாளிலே ஜனங்களை சொஸ்தமாக்கினபடியால்* _____ *கோபமடைந்தான்.*
3. *ஜனங்களெல்லாரும் இயேசுவால் செய்யப்பட்ட* _____ *செய்கைகளைக் குறித்து சந்தோஷப்பட்டார்கள்.*

<u>விடைகள்</u>

1. பதினெட்டு (லூக்கா 13 : 11) 3. சகல மகிமையான (லூக்கா13:17)
2. ஜெப ஆலயத்தலைவன் (லூக்கா 13 : 14)

IV <u>சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது :</u> (1 Mark)

1. எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்த ஸ்திரீயை சாத்தான் எத்தனை வருஷம் கட்டி வைத்திருந்தான்?
   a) பத்து b) பன்னிரண்டு c) பதினெட்டு d) இருபது

2. இயேசு பதினெட்டு வருஷம் கூனியாயிருந்த ஸ்திரீயை எந்த நாளில் சொஸ்தமாக்கினார்?
   a) முதலாம் நாளில் b) ஓய்வு நாளில்
   c) ஐம்பதாவது நாளில் d) பண்டிகை நாளில்

3. பதினெட்டு வருஷமாய் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட கூனியான ஸ்திரீயைப் பார்த்து, ஆபிரகாமின் குமாரத்தி என்று கூறியது யார்?
   a) இயேசு b) ஜெப ஆலயத்தலைவன் c) யூதர்கள் d) நூற்றுக்கு அதிபதி

<u>விடைகள்:</u>

1. c. (லூக்கா 13 : 11) 3. a. (லூக்கா 13 : 16)
2. b. (லூக்கா 13 : 14)

V <u>யார் யாரிடம் கூறியது</u> : (2 Marks)

1. "ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்". (லூக்கா 13 : 12)
   யார் : இயேசு
   யாரிடம் : பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக்கொண்ட ஸ்திரீயிடம்

2. "வேலை செய்கிறதற்கு ஆறுநாள் உண்டே". (லூக்கா 13 : 14)
யார் : ஜெப ஆலயத்தலைவன்
யாரிடம் : ஜனங்களிடம்

3. "ஓய்வுநாளில் ..... அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா?". (லூக்கா 13 : 15)
யார் : இயேசு
யாரிடம் : ஜெப ஆலயத்தலைவனிடம்

VI <u>ஒரிரு வாக்கியங்களில் விடையளி :</u> (2 Marks)

1. இயேசு பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஸ்திரீயை எவ்வாறு சொஸ்தமாக்கினார்?
இயேசு பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக்கொண்ட கூனியான ஸ்திரீயைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து, ''ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்'' என்று சொல்லி அவள்மேல் தமது கைகளை வைத்து சுகமாக்கினார் (லூக்கா 13 : 11 - 13).

2. பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக்கொண்ட கூனியான ஸ்திரீயை சுகமாக்கியது யார்? உடனே அவள் என்ன செய்தாள்?
பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக்கொண்ட கூனியான ஸ்திரீயை இயேசு சுகமாக்கினார். உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள் (லூக்கா 13 : 13).

3. இயேசு ஓய்வுநாளில் சொஸ்தமாக்கின படியால் கோபமடைந்தது யார்? அவன் ஜனங்களை எவ்வாறு கடிந்து கொண்டான்?
இயேசு ஓய்வுநாளிலே சொஸ்தமாக்கினபடியால், ஜெப ஆலயத்தலைவன் கோபமடைந்தான்.
அவன் ஜனங்களை நோக்கி, ''வேலைசெய்கிறதற்கு ஆறுநாள் உண்டே, அந்த நாட்களிலே நீங்கள் வந்து சொஸ்தமாக்கிக் கொள்ளுங்கள், ஓய்வுநாளிலே அப்படிச் செய்யலாகாது'' என்றான் (லூக்கா 13 : 14).

4. சகல மகிமையான செய்கைளை செய்தவர் யார்? அதைக்குறித்து சந்தோஷப்பட்டவர்கள் யார்?
இயேசு சகல மகிமையான செய்கைகளைச் செய்தார். ஜனங்களெல்லாரும் அதைக்குறித்து சந்தோஷப்பட்டார்கள் (லூக்கா 13 : 17).

VII <u>சுருக்கமான விடையளி</u> : (4 Marks)

1. பதினெட்டு வருஷமாய் பலவீனப்படுத்தும் ஆவியைக்கொண்ட ஸ்திரீயை இயேசு ஓய்வுநானில் சுகமாக்கினதைக்கண்டு கோபமடைந்திருந்த ஜெபஆலயத்தலைவனிடம், இயேசு கூறிய மறுமொழி என்ன?அதைக் கேட்ட ஜனங்களும் அவரை விரோதித்திருந்தவர்களும் என்ன செய்தார்கள்?
கர்த்தர் ஜெபஆலயத்தலைவனிடம், ''மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக்கொண்டுபோய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா?
இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா'' என்றார்.
அவர் அப்படிச் சொன்னபோது, அவரை விரோதத்திருந்த அனைவரும் வெட்கப்பட்டார்கள்
ஜனங்கள் எல்லாரும் அவரால் செய்யப்பட்ட சகல மகிமையான செய்கைகளைக் குறித்து சந்தோஷப்பட்டார். (லூக்கா 13 : 15 - 17).

VIII <u>போதனை :</u> (2 Marks)

நியாயப்பிரமாணத்தை எழுத்தின்படி கைக்கொள்வதைப் பார்க்கிலும், மனதுருக்கமே மிகவும் முக்கியமானது.

****

கெட்ட குமாரனைப் பற்றிய உவமை

(லூக்கா 15 : 11-32)

I *மனப்பாட வசனம் :* (2 Marks)

சங்கீதம் 51 : 17

"தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்."

II *பொருத்துக :* (1 Mark)

1. *கெட்ட குமாரன்*	- *துன்மார்க்கமான ஜீவியம்*	(லூக்கா 15 : 13)
2. *கெட்ட குமாரன்*	- *ஆஸ்தியை அழித்துப் போட்டவன்*	(லூக்கா 15 : 13)
3. *கெட்ட குமாரன்*	- *பரத்துக்கு விரோதமாக பாவஞ்செய்தவன்*	(லூக்கா 15 : 18, 21)
4. *தகப்பன்*	- *மனதுருக்கம்*	(லூக்கா 15 : 20)

III *கோடிட்ட இடங்களை நிரப்புக :* (1 Mark)

1. *இளையகுமாரன் _____ ஜீவனம்பண்ணி தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்.*
2. *கெட்டகுமாரன் தன் ஆஸ்தியையெல்லாம் செலவழித்தபின்பு அந்த தேசத்தில் _____ உண்டானது.*
3. *_____ மனந்திரும்பி தன் தகப்பனிடம் மன்னிப்புக் கேட்டான்.*
4. *இளைய குமாரன் தகப்பனிடம் மன்னிப்பு கேட்டவுடன், தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: ''நீங்கள் _____ கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு _____ யும், கால்களுக்கு _____ யும் போடுங்கள்'' என்றான்.*

விடைகள்

1. *துன்மார்க்கமாய் (லூக்கா 15 : 13)*
2. *கொடிய பஞ்சம் (லூக்கா 15 : 14)*
3. *இளைய குமாரனை (லூக்கா 15 : 21)*
4. *உயர்ந்த வஸ்திரத்தை, மோதிரத்தை, பாதரட்சைகளை (லூக்கா 15 : 22)*

IV *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது :* (1 Mark)

1. தகப்பனுடைய ஆஸ்திகளை எடுத்துக்கொண்டு தூரதேசத்திற்குப் புறப்பட்டுப் போனது யார்?
   a) யோசேப்பு b) மூத்த குமாரன் c) இளைய குமாரன் d) ஐசுவரியவான்
2. கெட்டகுமாரன் எதை மேய்க்கும்படி அனுப்பப்பட்டான்?
   a) பன்றிகளை b) ஆடுகளை c) ஆட்டுக்குட்டிகளை d) கழுதைகளை
3. கெட்டகுமாரன் மனந்திரும்பி தூரத்தில் வரும்போதே, அவனைக் கண்டது யார்?
   a) மூத்த சகோதரன் b) தகப்பன் c) ஊழியக்காரர் d) சிநேகிதர்
4. தகப்பன் யாருக்காக விருந்தை ஆயத்தம்பண்ணினான்?
   a) மனந்திரும்பிய குமாரனுக்காக b) மூத்த குமாரனுக்காக
   c) ஊழியக்காரர்களுக்காக d) சிநேகிதர்களுக்காக
5. வயலிலிருந்து வீட்டுக்குத் திரும்பிவந்து கீதவாத்தியங்களையும், நடனக்களிப்பையும் கேட்டது யார்?
   a) மூத்த குமாரன் b) இளைய குமாரன் c) தகப்பன் d) ஊழியக்காரர்
6. "மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்" அவன் யார்?
   a) மூத்த சகோதரன் b) தாவீது c) மோசே d) இளைய குமாரன்

விடைகள்:

1. *c. (லூக்கா 15 : 13)*	4. *a. (லூக்கா 15 : 21, 23)*
2. *a. (லூக்கா 15 : 15)*	5. *a. (லூக்கா 15 : 25)*
3. *b. (லூக்கா 15 : 20)*	6. *d. (லூக்கா 15 : 24, 32)*

V <u>*யார் யாரிடம் கூறியது*</u> : (2 Marks)

1. **"தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும்".** (லூக்கா 15 : 12)
   யார் : இளைய குமாரன்
   யாரிடம் : தகப்பனிடம்

2. **"தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்".**(லூக்15:21)
   யார் : இளைய குமாரன்
   யாரிடம் : தகப்பனிடம்

3. **"நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம்".** (லூக்கா 15 : 23)
   யார் : தகப்பன்
   யாரிடம் : ஊழியக்காரரிடம்

4. **"நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை".** (லூக்கா 15 : 29)
   யார் : மூத்த குமாரன்
   யாரிடம் : தகப்பனிடம்

5. **a) "மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய்".** (லூக்கா 15 : 31)
   b) "எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது". (லூக்கா 15 : 31)
   c) "உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்". (லூக்கா 15 : 32)
   யார் : தகப்பன்
   யாரிடம் : மூத்த குமாரனிடம்

VI <u>*ஒரிரு வாக்கியங்களில் விடையளி :*</u> (2 Marks)

1. இளைய குமாரன் எவ்வாறு தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்?
   இளைய குமாரன் தன் ஆஸ்திகள் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான் (லூக்கா 15 : 13).

2. இளைய குமாரன் எப்பொழுது குறைவுபடத் தொடங்கினான்?
   இளைய குமாரன் தன் ஆஸ்திகள் எல்லாவற்றையும் வெசலவழித்தபின்பு, அந்தத் தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத் தொடங்கினான் (லூக்கா 15 : 14).

3. தேசத்தில் பஞ்சம் உண்டானபோது, இளையகுமாரன் யாரிடம் போனான்? அவனை அவன் எங்கு அனுப்பினான்?
   தேசத்தில் பஞ்சம் உண்டானபோது, இளையகுமாரன் அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான் (லூக்கா 15 : 15).

4. மனந்திரும்பிய இளையகுமாரன் தன் தகப்பனிடத்தில் திரும்பிவந்தபோது, தகப்பன் என்ன செய்தார்?
   மனந்திரும்பிய இளையகுமாரன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான் (லூக்கா 15 : 20).

5. மனந்திரும்பிய இளைய குமாரன் தன் தகப்பனிடத்தில் எவ்வாறு மன்னிப்புக் கேட்டான்?
   மனந்திரும்பிய இளையகுமாரன் தன் தனப்பனை நோக்கி: 'தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல' என்று சொன்னான் (லூக்கா 15 : 21).

6. கெட்டகுமாரன் மனந்திரும்பி தன் தகப்பனிடத்தில் வந்தபோது தகப்பன் ஏன் மிகவும் சந்தோஷப்பட்டார்?
   கெட்டகுமாரன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணமற்போனான், திரும்பவும் காணப்பட்டான். ஆகையால் தகப்பன் மிகவும் சந்தோஷப்பட்டார் (லூக்கா 15 : 24).

7. மூத்தகுமாரன் கோபமடைந்து வீட்டுக்குள் போக மனதில்லாதிருந்தபோது, தகப்பன் என்ன செய்தார்?
   தகப்பன் வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான் (லூக்கா 15 : 28).

VII <u>சுருக்கமான வினாக்கள்</u> : (4 Marks)

1. இளைய குமாரனுக்கு எப்பொழுது புத்தி தெளிந்தது?

இளைய குமாரன் துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி தன் ஆஸ்திகள் எல்லாவற்றையும் அழித்துப் போட்டபின்பு அந்த தேசத்திலே கொடிய பஞ்சம் உண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத் தொடங்கி அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான். பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான். ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை. அப்பொழுது அவனுக்கு புத்தி தெளிந்தது (லூக்கா 15 : 13, 16, 17).

2. கெட்டகுமாரன் புத்தி தெளிந்தபோது தனக்குள்ளே கூறிக்கொண்டது என்ன?

கெட்டகுமாரனுக்கு புத்தி தெளிந்தபோது, தன் தகப்பனையும் வீட்டையும் நினைவுகூர்ந்தான். அப்பொழுது அவன், ''என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன்'' என்று தனக்குள்ளே கூறிக்கொண்டான்.(லூக்கா15 : 17 19).

3. கெட்டகுமாரன் மனந்திரும்பியபோது செய்த தீர்மானம் என்ன?

கெட்டகுமாரன் மனந்திம்பியபோது, ''நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன்'' என்று தீர்மானம் பண்ணினான் (லூக்கா 15 : 18, 19).

4. கெட்டகுரான் மனந்திரும்பி, தன் தகப்பனிடத்தில் வந்து மன்னிப்புக்கேட்ட பொழுது, தகப்பன் அவனை எவ்வாறு உபசரித்தான்?

தகப்பன் அவனுக்கு உயர்ந்த வஸ்திரத்தை உடுத்தினான். அவன் கைக்கு மோதிரத்தையும், கால்களுக்குப் பாதரட்சைகளையும் போட்டான். அவனுக்காக கொழுத்த கன்றை அடித்து விருந்தை ஆயத்தம்பண்ணினான் (லூக்கா 15 : 22, 23).

5. மூத்தகுமாரன் ஏன் வீட்டிற்குள்போக மனதில்லாதருந்தான்?

மூத்தகுமாரன் வயலிலிருந்து திரும்பி வீட்டுக்குச் சமீபமாய், கீதவாத்தியத்தையும் நடனக்களிப்பையும் கேட்டு, ஊழியக்காரரில் ஒருவனை அழைத்து, ''இதென்ன'', என்று விசாரித்தான்.

அதற்கு அவன், ''உம்முடைய சகோதரன் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காகக் கொழுத்த கன்றை அடிப்பித்தார்'' என்றான். ஆகையால் அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான் (லூக்கா15:25-28).

6. மூத்தகுமாரன் கோபமடைந்து தன் தகப்பனிடம் கூறியது என்ன?

மூத்தகுமாரன் கோபமடைந்து தன் தகப்பனிடம், ''இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து, ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை. வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப்போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீரே'' என்றான் (லூக்கா 15 : 29, 30).

7. மூத்தகுமாரன் கோபமடைந்தபோது தன் தகப்பன் அவனிடம் கூறிய மறுமொழி என்ன?

மூத்தகுமாரன் கோபமடைந்தபோது தகப்பன் அவனிடம், ''மகனே. நீ எப்போதும் என்னோடிருக்கிறாய். எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது.

உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான். காணாமற்போனான். திரும்பவும் காணப்பட்டான் ஆனபடியினாலே நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்கவேண்டுமே'' என்று சொன்னான் (லூக்கா 15 : 31, 32).

VIII <u>போதனை :</u> (2 Marks)

ஒரு பாவி நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தோடு இயேசுவினிடத்தில் வரும்போது, அவர் அவனை ஒருபோதும் புறம்பே தள்ளாமல் அவனைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுகிறார்,

****

வகுப்பு : 4

பாடம்-18

ஞாயிறு பள்ளி மத்திய நிறுவனம், கடலூர்.

ஐசுவரியவானும் லாசருவும்

(லூக்கா 16 : 19 - 31)

I <u>மனப்பாட வசனம் :</u> (2 Marks)

நீதிமொழிகள் 14:21

"பிறனை அவமதிக்கிறவன் பாவஞ்செய்கிறான்; தரித்திரனுக்கு இரங்குகிறவனோ பாக்கியமடைவான்."

II <u>பொருத்துக :</u> (1 Mark)

1.	*லாசரு*	-	*தரித்திரன்*	*(லூக்கா 16 : 20)*
2.	*லாசரு*	-	*பருக்கள்*	*(லூக்கா 16 : 20)*
3.	*லாசரு*	-	*ஆபிரகாமின் மடி*	*(லூக்கா 16 : 23)*
4.	*ஐசுவரியவான்*	-	*சம்பிரமமாய் வாழ்ந்தான்*	*(லூக்கா 16 : 19)*
5.	*ஐசுவரியவான்*	-	*பாதாளம்*	*(லூக்கா 16 : 22, 23)*

III <u>கோடிட்ட இட ங்களை நிரப்புக :</u> (1 Mark)

1. _____ *சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான்.*
2. *லாசரு என்னும் பேர் கொண்ட ஒரு* _____ *இருந்தான்.*
3. _____ *பருக்கள் நிறைந்தவனாய் ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்தான்*
4. _____ *வந்து லாசருவின் பருக்களை நக்கிற்று.*
5. *லாசரு மரித்து* _____ *ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்.*
6. *ஐசுவரியவான்* _____ *இருந்து ஆபிரகாமின் மடியிலிருந்த* _____ *கண்டான்.*
7. *ஐசுவரியவான் இருந்த இடத்திலிருந்து லாசரு இருந்த இடத்திற்கு போகமுடியாதபடிக்கு இடையே*_____ *உண்டாக்கப்பட்டிருந்தது.*
8. _____ *ஜீவியத்தை தேவன் அங்கிகரிப்பதில்லை.*

விடைகள்

1.	*ஐசுவரியவான்*	*(லூக்கா 16 : 19)*	*5.*	*தேவதூதரால்*	*(லூக்கா 16 : 22)*
2.	*தரித்திரன்*	*(லூக்கா 16 : 20)*	*6.*	*பாதாளத்தில், லாசருவை*	*(லூக்கா 16 : 23)*
3.	*லாசரு*	*(லூக்கா 16 : 20)*	*7.*	*பெரும்பிளப்பு*	*(லூக்கா 16 : 26)*
4.	*நாய்கள்*	*(லூக்கா 16 : 21)*	*8.*	*சம்பிரமமான*	*(போதனை)*

IV <u>சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது :</u> (1 Mark)

1. சம்பிரமமாய் வாழ்ந்தது யார்?
   a) தரித்திரன் b) லாசரு c) ஐசுவரியவான் d) வாலிபன்

2.. லாசரு யாருடைய வாசலருகே கிடந்தான்?
   a) ஐசுவரியவான் b) எஜமான் c) ஆபிரகாம் d) சகேயு

3. ஆபிரகாமுடைய மடியில் இருந்தது யார்?
   a) ஐசுவரியவான் b) லாசரு c) லோத்து d) சகேயு

4. ஐசுவரியவானுக்கு எத்தனை சகோதரர்கள் இருந்தனர்?
   a) நான்கு b) ஐந்து c) ஆறு d) ஏழு

5. மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும் நம்பமாட்டார்கள் என்று ஐசுவரியவானிடம் கூறியது யார்?
   a) ஆபிரகாம் b) மோசே c) ஆரோன் d) எலியா

<u>விடைகள்:</u>

1.	*c.*	*லூக்கா*	*16 : 19*	*4.*	*b.*	*லூக்கா*	*16 : 27*
2.	*a.*	*லூக்கா*	*16 : 20*	*5.*	*a.*	*லூக்கா*	*16 : 31*
3.	*b.*	*லூக்கா*	*16 : 22*				

V <u>யார் யாரிடம் கூறியது</u> : (2Marks)

1. "தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவை குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்". (லூக்கா 16 : 24)
யார் : ஐசுவரியவான்
யாரிடம் : ஆபிரகாமிடம்

2. "இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே". (லூக்கா 16 : 24)
யார் : ஐசுவரியவான்
யாரிடம் : ஆபிரகாமிடம்

3"நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய்".(லூக்16:25)
யார் : ஆபிரகாம்
யாரிடம் : ஐசுவரியவானிடம்

4. "இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான் நீயோ வேதனைப்படுகிறாய்". (லூக்கா 16 : 25)
யார் : ஆபிரகாம்
யாரிடம் : ஐசுவரியவானிடம்

5. "நீர் அவனை என் தகப்பன் வீட்டிற்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்கிறேன்" (லூக்கா 16 : 28)
யார் : ஐசுவரியவான்
யாரிடம் : ஆபிரகாமிடம்

6. "மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும் நம்பமாட்டார்கள்". (லூக்கா 16 : 31)
யார் : ஆபிரகாம்
யாரிடம் : ஐசுவரியவானிடம்

VI <u>ஓரிரு வாக்கியங்களில் விடையளி</u> **:** (2 Marks)

1. ஐசுவரியவான் எப்படி வாழ்ந்து வந்தான்?
ஐசுவரியவான் இரத்தாம்பரமும், விலையேறப்பேற்ற வஸ்திரம் தரித்து அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து வந்தான் (லூக்கா 16 : 19).

2. ஐசுவரியவானுடைய வாசலில் கிடந்த லாசரு என்பவன் யார்? அவனுடைய சரீரம் எப்படி இருந்தது?
லாசரு தரித்திரனாயிருந்தான். அவன் சரீரம் முழுவதும் பருக்கள் நிறைந்து இருந்தது. (லூக்கா 16 : 20).

3. தரித்திரனாகிய லாசரு எதினாலே தன்னுடைய பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்?
ஐசுவரியவானுடைய மேசையிலிருந்து விழும் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான் (லூக்கா 16 : 21).

4. தரித்திரனாகிய லாசரு மரித்தபின்பு யாரால் எங்கே கொண்டு போகப்பட்டான்?
தேவதூதர்களால் ஆபிரகாமின் மடிக்கு கொண்டு போகப்பட்டான் (லூக்கா16:22)

5. ஐசுவரியவான் பாதாளத்தில் வேதனைப்படுகிறபொழுது யார்யாரைக் கண்டான்?
ஆபிரகாமையும், அவன் மடியில் இருக்கிற லாசருவையும் கண்டான் (லூக்கா16:23).

6. பூமியிலே உயிரோடு இருக்கும் காலத்தில் ஐசுவரியவான் அனுபவித்தது என்ன? தரித்திரனாகிய லாசரு அனுபவித்தது என்ன?
ஐசுவரியவான் நன்மையையும், லாசரு தீமையையும் அனுபவித்தார்கள் (லூக்கா16:25).

7. பாதாளத்திலிருந்து ஆபிரகாமிடம் வேண்டிக்கொண்டது யார்? யாருக்காக வேண்டிக்கொண்டான்?
ஐசுவரியவான், தன் ஐந்து சகோதரர்களுக்காக (லூக்கா 16 : 27).

8. பாதாளத்திலிருந்த ஐசுவரியவான் தன் தகப்பன் வீட்டாருக்காக யாரிடம் வேண்டிக்கொண்டான்? யாரை அனுப்பும்படியாக வேண்டிக்கொண்டான்?
ஆபிரகாமிடத்தில் லாசருவை அனுப்பும்படி வேண்டிக்கொண்டான் (லூக்கா16: 28).

9. ஐசுவரியவான் தன் சகோதரர்களுக்காக ஆபிரகாமிடம் வேண்டிக்கொண்டபோது, அவன் அவர்கள் யாருக்கு செவிகொடுக்கட்டும் என்றான்?
மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடுக்கட்டும் என்று சொன்னான் (லூக்கா 16 : 29).

VII <u>சுருக்கமான விடையளி</u> : (4 Marks)

1. ஐசுவரியவான் எதைக் குறித்து அறிவு அற்றவனாய் இருந்தான்? அதினால் அவனுக்கு சம்பவித்தது என்ன?

மரணத்திற்குப்பின் ஒரு ஜீவியம் இருக்கிறது என்பதைக் குறித்தோ, ஏழைகளுக்கு எதவி செய்வதைக் குறித்தோ அவன் எவ்வித அறிவும் அற்றவனாயிருந்தான். ஆகையால் சம்பிரமமாய் வாழ்ந்தான். அவன் மரித்தபின்பு பாதாளத்தில் அக்கினி ஜுவாலையில் வேதனைப்பட வேண்டியதாயிற்று (பாடத்திட்டம்).

2. தரித்திரனாகிய லாசரு பூமியிலே எப்படி வாழ்ந்து வந்தான்? அவன் மரித்தபின்பு பெற்றுக்கொண்ட நன்மைகள் யாவை?

லாசரு ஒரு தரித்திரனாய், அவன் சரீரம் முழுவதும் பருக்கள் நிறைந்தவனாய், ஐசுவரியவான் வாசலருகே கிடந்து, அவன் மேசையிலிருந்து விழும் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசை உள்ளவனாக வாழ்ந்து வந்தான். அவன் மரித்தபன்பு தேவதூதரால் ஆபிரகாமுடைய மடிக்கு கொண்டு போகப்பட்டு தேற்றப்பட்டான் (லூக்கா 16 : 20-22).

3. பாதாளத்திலிருந்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்த ஐசுவரியவான் ஆபிரகாமை கூப்பிட்டு சொன்னது என்ன?

தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும். இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டு சொன்னான் (லூக்கா 16 : 24).

4. ஐசுவரியவான் லாசருவை அனுப்பி தன் நாவைக் குளிரப்பண்ணும்படி ஆபிரகாமிடம் வேண்டிக்கொண்டபோது, ஆபிரகாம் அவனுக்கு கொடுத்த மறுமொழி என்ன?

ஆபிரகாம் ஐசுவரிவாளிடம் : மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்கும் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான், இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான் நீயோ வேதனைப்படுகிறாய். இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்கு போகவோ வரவோ கூடாதபடிக்கு நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னான் (லூக்கா 16 : 25, 26).

5. ஐசுவரியவான் ஆபிரகாமிடம் தன் சகோதரர்களுக்காக வேண்டிக்கொண்டது என்ன? அதற்கு ஆபிரகாமின் பதில் என்ன?

ஐசுவரியவான் ஆபிரகாமிடம், தகப்பனே! எனக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு. அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்திற்கு வராதபடிக்கு லாசருபோய் அவர்களுக்கு சாட்சியாக அறிவிக்கும்போருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்கிறேன் என்றான். அதற்கு ஆபிரகாம்: மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான் (லூக்கா 16 : 27 - 29).

6. மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் அவர்கள் செவிகொடுக்கட்டும் என்று ஆபிரகாம் சொன்னதற்கு ஐசுவரியவானுடைய பதில் என்ன? இதற்கு ஆபிரகாமின் மறுமொழி என்ன?

ஐசுவரியவான், ''அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள்'' என்றான். அதற்கு மறுமொழியாக ஆபிரகாம், ''அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடுக்காவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள்'' என்றான் (லூக்கா 16 : 30,31).

VIII <u>போதனை :</u> (2 Marks)

சுகபோகமான ஜீவியத்தைத் தேவன் அங்கீகரிப்பதில்லை. நாம் ஏழைகளை அசட்டை செய்யாது, அவர்கள் மேல் மனதுருகி, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

****

பத்துக் குஷ்டரோகிகள்

(லூக்கா 17 : 11-19)

I *மனப்பாட வசனம் :* (2 Marks)

சங்கீதம் 116 : 12, 13

"கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்.

இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன் "

II *பொருத்துக :* (1 Mark)

1.	*இயேசு*	-	*இரக்கமுள்ளவர்*	*(லூக்கா 17 : 18)*
2.	*குஷ்டரோகிகள்*	-	*பத்துபேர்*	*(லூக்கா 17 : 12)*
3.	*சமாரியன்*	-	*தேவனை மகிமைப்படுத்தினவன்*	*(லூக்கா 17:15,16)*
4.	*சமாரியன்*	-	*அந்நியன்*	*(லூக்கா 17 : 18)*

III *கோடிட்ட இடங்களை நிரப்புக :* (1 Mark)

1. *இயேசு எருசலேமுக்கு பிரயாணம் பண்ணுகையில் _____, _____ என்னும் நாடுகளின் வழியாக நடந்துபோனார்.*
2. *கர்த்தராகிய இயேசுவின் வார்த்தையின்படி, _____ குஷ்டரோகிகள் ஆசாரியர்களுக்குத் தங்களைக் காண்பிக்கும்படி போனார்கள்.*
3. *_____ தான் ஆரோக்கியமானதைக் கண்டு உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தினான்.*

விடைகள்

1. *சமாரியா, கலிலேயா (லூக்கா 17 : 11)*
2. *பத்து (லூக்கா 17 : 12, 14)*
3. *சமாரியன் (லூக்கா 17 : 15, 16)*

IV *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது :* (1 Mark)

1. இயேசு எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணுகையில் எத்தனை குஷ்டரோகிகள் அவரை சந்தித்தார்கள்?
   a) இரண்டு b) ஐந்து c) ஏழு d) பத்து

2. பத்துக் குஷ்டரோகிகளை யாரிடம் காண்பிக்கும்படியாக இயேசு கூறினார்?
   a) லேவியரிடம் b) ஆசாரியரிடம் c) பரிசேயரிடம் d) வேதபாரகரிடம்

3. ஆரோக்கியமான பத்து குஷ்டரோகிகளில் எத்தனை பேர் திரும்பி வந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தினார்கள்?
   a) ஒருவன் b) ஐந்து பேர் c) ஏழு பேர் d) பத்து பேர்

4. இயேசுவின் பாதத்தருகே முகங்குப்புற விழுந்து அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினது யார்?
   a) சகேயு b) பர்திமேயு c) சமாரியன் d) லேவியன்

விடைகள்:

1.	*d.*	*லூக்கா*	*17 : 12*	*2.*	*b.*	*லூக்கா*	*17 : 14*
3.	*a.*	*லூக்கா*	*17 : 15*	*4.*	*c.*	*லூக்கா*	*17 : 16*

V <u>*யார் யாரிடம் கூறியது*</u> : (2Marks)

1. "இயேசு ஐயரே எங்களுக்கு இரங்கும்". (லூக்கா 17 : 13)
யார் : பத்து குஷ்டரோகிகள்
யாரிடம் : இயேசுவிடம்

2. "நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களை காண்பியுங்கள;";. (லூக்கா 17 : 14)
யார் : இயேசு
யாரிடம் : பத்துக் குஷ்டரோகிகளிடம்

3. "மற்ற ஒன்பது பேர் எங்கே ". (லூக்கா 17 : 19)
யார் : இயேசு
யாரிடம் : குஷ்டரோகம் சுகமாக்கப்பட்ட சமாரியனிடம்

VI <u>*ஒரிரு வாக்கியங்களில் விடையளி*</u> **:** (2 Marks)

1. இயேசு எருசலேமுக்கு பிரயாணம் பண்ணுகையில் எந்தெந்த நாடுகளின் வழியாக நடந்து போனார்?
இயேசு எருசலேமுக்கு பிரயாணம் பண்ணுகையில் கலிலேயா, சமாரியா என்னும் நாடுகளின் வழியாக நடந்துபோனார் (லூக்கா 17 : 11).

2. இயேசு எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணுகையில் எத்தனை குஷ்டரோகிகள் அவரை சந்தித்தார்கள்? அவர்கள் இயேசுவை நோக்கி உரத்த சத்தமிட்டு என்ன வேண்டிக்கொண்டார்கள்?
(a) பத்து குஷ்டரோகிகள்
(b) இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் (லூக்கா 17 : 13).

3. இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்ட பத்து குஷ்டரோகிகளை பார்த்து இயேசு என்ன சொன்னார்?அதற்கு அவர்கள் என்ன செய்தார்கள்?
(a) நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார்.
(b)அந்தப்படி அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து போகையில் சுத்தமானார்கள். (லூக்கா 17 : 14).

4. சுகமாக்கப்பட்ட பத்து குஷ்டரோகிகளில் ஒருவனாகிய சமாரியன் இயேசுவிடம் ஏன் திரும்பி வந்தான்?
தேவனை மகிமைப்படுத்தும்படியாகவும், இயேசுவுக்கு நன்றி சொல்லும்படியாகவும் திரும்பி வந்தான் (லூக்கா 17 : 15, 16)

VII <u>*சுருக்கமான விடையளி*</u> : (4 Marks)

1. சுகமாக்கப்பட்ட சமாரியனான குஷ்டரோகி தேவனுக்கு எவ்வாறு நன்றி செலுத்தினான்?
சுகமாக்கப்பட்ட சமாரியனான குஷ்டரோகி தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பி வந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, இயேசுவினுடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான் (லூக்17:15,16).

2. சுகமாக்கப்பட்ட சமாரியன் தேவனை மகிமைப்படுத்தினபோது கர்த்தராகிய இயேசு கூறியது என்ன?
''சுத்தமானவர்கள் பத்து பேர் அல்லவா, மற்ற ஒன்பது பேர் எங்கே? தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பி வரக்காணோமே'' என்று சொல்லி, சமாரியனை நோக்கி: ''நீ எழுந்து போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது'' என்றார் (லூக்கா 17 : 17-19).

VIII <u>**போதனை :**</u> (2 Marks)

கர்த்தரிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்ட நாம் நன்றியுள்ள இருதயமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

****

விதவையும் அநீதியுள்ள நியாயாதிபதியும் பற்றிய உவமை

(லூக்கா 18 : 1 - 8)

I <u>மனப்பாட வசனம் :</u> (2 Marks)

பிலிப்பியர் 4 : 6.

"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் "

II <u>பொருத்துக :</u> (1 Mark)

1.	நியாயாதிபதி	-	தேவனுக்குப்பயப்படாதவன்	(லூக்கா 18 : 2)
2.	நியாயாதிபதி	-	மனுஷரை மதியாதவன்	(லூக்கா 18 : 2)
3.	விதவை	-	தொந்தரவு செய்தல்	(லூக்கா 18 : 5)
4.	தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்	-	இரவும் பகலும் கூப்பிடுகிறவர்கள்	(லூக்கா 17 : 18)
5.	தேவன்	-	நீடிய பொறுமையுள்ளவர்	(லூக்கா 18 : 7)
6.	மனுஷ குமாரன்	-	பூமியிலே விசுவாசம்	(லூக்கா 18 : 8)

III <u>கோடிட்ட இடங்களை நிரப்புக :</u> (1 Mark)

1. சோர்ந்து போகாமல் எப்பொழுதும் _____ பண்ண வேண்டும்.
2. நியாயாதிபதி _____ தேவனுக்குப் பயப்படாதவனும், _____ மதியாதவனுமாயிருந்தான்.
3. இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு _____ செய்யவேண்டும் என்று நியாயாதிபதி தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.
4. தேவன் தம்மை நோக்கி_____கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களின் விஷயத்தில்_____ உள்ளவராய் இருந்து சீக்கிரத்தில் நியாயஞ்செய்வார்.
5. _____ வரும்போது விசுவாசத்தைக் காண்பாரோ?

<u>விடைகள்</u>

1. ஜெபம் (லூக்கா 18 : 1)
2. தேவனுக்கு, மனுஷரை (லூக்கா 18 : 2)
3. நியாயம் (லூக்கா 18 : 5)
4. இரவும் பகலும், நீடிய பொறுமை (லூக்கா 18:7)
5. மனுஷகுமாரன் (லூக்கா 18 : 8)

IV <u>சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது :</u> (1 Mark)

1. அநீதியுள்ள நியாயாதிபதியிடம் உதவி கேட்டது யார்?
   a) விதவை b) குஷ்டரோகி c) குருடன் d) சப்பாணி

2. விதவையின் வழக்கு யாரோடு இருந்தது?
   a) எதிராளி b) நண்பன் c) சகோதரன் d) அயல் வீட்டுக்காரன்

3. தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய நாம் எப்பொழுது தேவனை நோக்கிக் கூப்பிட வேண்டும்?
   a) காலை b) பகல் c) இரவு d) இரவும், பகலும்

4. தேவன் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் எப்படியிருந்து சீக்கிரத்தில் நியாயஞ்செய்வார்?
   a) பொறுமையுள்ளவராக b) நீடிய பொறுமையுள்ளவராக
   c) அன்புள்ளவராக d) இரக்கமுள்ளவராக

விடைகள்:

1. a. லூக்கா 18 : 3		*2. a. லூக்கா 18 : 3*	
3. d. லூக்கா 18 : 7		*4. b. லூக்கா 18 : 7*	

V *யார் யாரிடம் கூறியது* : (2Marks)

1. "எனக்கும், என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்ய வேண்டும்". (லூக்கா 18 : 3)

யார் : விதவை
யாரிடம் : அநீதியுள்ள நியாயாதிபதியிடம்

2. "இவளுக்கு நியாயஞ்செய்ய வேண்டும்". (லூக்கா 18 : 5)

யார் : அநீதியுள்ள நியாயாதிபதி
யாரிடம் : தனக்குள்ளே

3. "அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதை சிந்தித்துப் பாருங்கள்". (லூக்கா 18 : 6)

யார் : கர்த்தர்
யாரிடம் : சீஷர்களிடம்

4. "ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?". (லூக்கா 18 : 8)

யார் : கர்த்தர்
யாரிடம் : சீஷர்களிடம்

VI *ஒரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. 'விதவையும் அநீதியுள்ள நியாயாதிபதியும்' - என்ற உவமையை இயேசு யாரிடம் சொன்னார்? எதற்காக?
சீஷர்களிடம் சோர்ந்து போகாமல் ஜெபிக்கவேண்டும் என்பதற்காக (லூக்கா18 : 1).

2. 'அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதை சிந்தித்துப் பாருங்கள்' என்று சொன்னது யார்? யாரிடம் சொன்னார்?
கர்த்தர், சீஷர்களிடம் (லூக்கா 18 : 6).

3. அநீதியுள்ள நியாயாதிபதி எப்படிப்பட்ட மனுஷன்?
அநீதியுள்ள நியாயாதிபதி தேவனுக்குப் பயப்படாதவன், மனுஷரை மதியாதவன் (லூக்கா 18 : 2).

4. அநீதியுள்ள நியாயாதிபதியிடம் தன் காரியத்தில் நியாயம் செய்யவேண்டுமென்று விண்ணப்பம் பண்ணினது?
கைதவையான ஒரு ஸ்திரி (லூக்கா18:3,5)

5. இரவும் பகலும் தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்கள் விஷயத்தில் தேவன் என்ன செய்வார்?
தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து, அவர்களுக்கு சீக்கிரத்தில் நியாயஞ்செய்வார் (லூக்கா 18: 7)

6. யாருடைய விஷயத்தில் தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து நியாயஞ் செய்வார்?
தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து நியாயஞ் செய்வார் (லூக்கா 18: 7)

VII *ஒரிரு வாக்கியங்களில் விடையளி* : (2 Marks)

1. விதவை அநீதியுள்ள நியாயாதிபதியிடம் பண்ணின விண்ணப்பம் என்ன?
விதவை அநீதியுள்ள நியாயாதிபதியிடம், 'எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்ய வேண்டும் ' என்று விண்ணப்பம் பண்ணினாள், (லூக்கா 18 : 3).

2. அநீதியுள்ள நியாயாதிபதி தனக்குள்ளே சொல்லிக் கொண்டது என்ன?

இந்த விதவை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி என்னை வந்து அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான் (லூக்கா 18 : 5).

VIII <u>சுருக்கமான விடையளி</u> : (4 Marks)

1. விதவை அநீதியுள்ள நியாயாதிபதியிடம் பண்ணின விண்ணப்பத்தையும், அதற்கு நியாயாதிபதியின் தீர்மானத்தையும் பற்றி எழுது.

விதவை, எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்ய வேண்டும் என்று அநீதியுள்ள நியாயாதிபதியிடம் விண்ணப்பம் பண்ணினாள். வெகுநாள் வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. பின்பு அவன் : நான் தேவனுக்கு பயப்படாமலும் மனுஷரை மதியாமலுமிருந்தும், இந்த விதவை என்னை எப்பொ தும் தொந்தரவு எசய்கிறபடியினால் இவள் அடிக்கடி வந்து, என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். (லூக்கா 18 : 3 - 5).

2. சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்று கர்த்தர் கூறிய உவமையின் ஆவிக்குரிய கருத்து என்ன?

தேவன் தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயஞ்செய்வார்.

எனவே நாம் நம்முடைய காரியங்களில் தேவனிடத்திலிருந்து பதில் கிடைக்கும்வரை சோர்ந்துபோகாமல் இரவும் பகலும் ஜெபம் பண்ண வேண்டும். (லூக்கா 18 : 7, 8).

XI <u>போதனை :</u> (2 Marks)

தேவன் நம்முடைய ஜெபங்களுக்கு உடனே பதில் தராமலிருக்கும்போது நாம் அதைரியப்படக்கூடாது. தொடர்ந்து ஜெபிக்கிற ஜெபங்களுக்கு நிச்சயமாகவே பலன் தரும்.

****